வரதர் கதை மலர் - 2

பதினைந்து வயதுக்குட்பட்ட சிறார்களுக்கான கதை

# இராமன் கதை

## (இராமாயணம்)

"சம்பந்தன்"

சிற்றன்னையின் சூழ்ச்சியால் இராமன் காட்டுக்குப் போகிறான். அவன் மனைவி சீதையும், தம்பி இலக்குமணனும் உடன் போகிறார்கள். காட்டில் சீதையை இராவணன் தந்திரமாகக் கவர்ந்து செல்கிறான். இதனால் பிரசித்தி பெற்ற இராம - இராவண யுத்தம் நடக்கிறது. சுவையான கதை!

## LIQUID

| | |
|---|---|
| 10 millilitres | =1 centilitre |
| 10 centilitres | =1 decilitre |
| 10 decilitres | =1 litre |
| 10 litres | =1 decaliter |
| 10 decaliters | =1 hectolitre |
| 10 hectolitres | =1 kilolitre |
| 1 litre | =1·7598 pints |
| 1 gallon | =4·54596 litres |

## LINEAL MEASURS

| | | |
|---|---|---|
| | 1 Inch | =25·4 mm |
| 12 in | =1 Foot | =0·30480m |
| 3 ft | =1 Yard | =0·914399 " |
| 5½ yds | =1 Rod | =5·03 " |
| 4 rod | =1 Chain | |
| 10 chain | =1 Furlong | |
| 8 furlong | =Mile | =1760 yds |

## WEIGHT

| | |
|---|---|
| 1000 m.grams | =1 gram |
| 10 grams | =1 decagram |
| 10 decagrams | =1 hectogram |
| 10 hectograms | =1 kilogram |
| 100 kilograms | =1 quintal |
| 1000 kilograms | =1 metric ton |

Product of
E.K.K. & CO.
No. 76/6, New Moor Street, Colombo 12,
Manufactured from Cream Wove Paper N.P.C.

| 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|
| 1 × 2 | 1 × 3 | 1 × 4 | 1 × 5 |
| 2 × 4 | 2 × 6 | 2 × 8 | 2 × 10 |
| 3 × 6 | 3 × 9 | 3 × 12 | 3 × 15 |
| 4 × 8 | 4 × 12 | 4 × 16 | 4 × 20 |
| 5 × 10 | 5 × 15 | 5 × 20 | 5 × 25 |
| 6 × 12 | 6 × 18 | 6 × 24 | 6 × 30 |
| 7 × 14 | 7 × 21 | 7 × 28 | 7 × 35 |
| 8 × 16 | 8 × 24 | 8 × 32 | 8 × 40 |
| 9 × 18 | 9 × 27 | 9 × 36 | 9 × 45 |
| 10 × 20 | 10 × 30 | 10 × 40 | 10 × 50 |
| 11 × 22 | 11 × 33 | 11 × 44 | 11 × 55 |
| 12 × 24 | 12 × 36 | 12 × 48 | 12 × 60 |

| 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|
| 1 × 6 | 1 × 7 | 1 × 8 | 1 × 9 |
| 2 × 12 | 2 × 14 | 2 × 16 | 2 × 18 |
| 3 × 18 | 3 × 21 | 3 × 24 | 3 × 27 |
| 4 × 24 | 4 × 28 | 4 × 32 | 4 × 32 |
| 5 × 30 | 5 × 35 | 5 × 40 | 5 × 45 |
| 6 × 36 | 6 × 42 | 6 × 48 | 6 × 54 |
| 7 × 42 | 7 × 49 | 7 × 56 | 7 × 63 |
| 8 × 48 | 8 × 56 | 8 × 64 | 8 × 72 |
| 9 × 54 | 9 × 63 | 9 × 72 | 9 × 81 |
| 10 × 60 | 10 × 70 | 10 × 80 | 10 × 90 |
| 11 × 66 | 11 × 77 | 11 × 88 | 11 × 99 |
| 12 × 72 | 12 × 84 | 12 × 96 | 12 × 108 |

| 10 | 11 | 12 | 13 |
|---|---|---|---|
| 1 × 10 | 1 × 11 | 1 × 12 | 1 × 13 |
| 2 × 20 | 2 × 22 | 2 × 24 | 2 × 26 |
| 3 × 30 | 3 × 33 | 3 × 36 | 3 × 39 |
| 4 × 40 | 4 × 44 | 4 × 48 | 4 × 52 |
| 5 × 50 | 5 × 55 | 5 × 60 | 5 × 65 |
| 6 × 60 | 6 × 66 | 6 × 72 | 6 × 78 |
| 7 × 70 | 7 × 77 | 7 × 84 | 7 × 91 |
| 8 × 80 | 8 × 88 | 8 × 96 | 8 × 104 |
| 9 × 90 | 9 × 99 | 9 × 108 | 9 × 117 |
| 10 × 100 | 10 × 110 | 10 × 120 | 10 × 130 |
| 11 × 110 | 11 × 121 | 11 × 132 | 11 × 143 |
| 12 × 120 | 12 × 132 | 12 × 144 | 12 × 156 |

வரதர் கதை மலர் - 2

# இராமன் கதை

## (இராமாயணம்)

"சம்பந்தன்"

மேலதிகமாக ஒரு குட்டிக்கதை:

**முயலாரின் தேனீர் விருந்து!**

மொழி பெயர்த்தவர்: "சொக்கன்"

O சிறுவர்களுக்காக எழுதியது O

வரதர் கதைமலர் - 2
நூல்: இராமன் கதை
எழுதியவர்: "சம்பந்தன்"
வெளியீடு: வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம்.
(நாலாம் பதிப்பு)
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம்,
226, காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா 12/-

இந்நூலின்
முதலாம் பதிப்பு: 1949
இரண்டாம் பதிப்பு: 1953
மூன்றாம் பதிப்பு: 1956
(இந்த மூன்று பதிப்புகளையும் வெளியிட்டவர்:
எஸ். எஸ். சண்முகநாதன் அன். சன்ஸ். யாழ்ப்பாணம்.)

# பதிப்புரை

தமிழ் மக்களுக்குக் கிடைத்துள்ள இரண்டு பெரிய இதிகாச நூல்கள் இராமாயணமும் பாரதமும். இவை இரண்டையும் தமிழ்ச் சிறார்கள் சுருக்கமாகவேனும் படித்திருக்க வேண்டும். பெரியவர்களான பின் விரிவான கதை நூல்களைப் படிக்கலாம்.

இப்போது 'இராமன் கதை' என்ற பெயரில் இராமாயணக் கதை வெளிவந்திருக்கிறது.

ஈழத்தின் மூத்த எழுத்தாளரான திரு. 'சம்பந்தன்' அவர்கள் இதைப் பல ஆண்டுகளுக்கு முன்பே எழுதியிருக்கிறார். இந் நூலை தந்து வெளியிடும்படி என்னை ஊக்குவித்த எழுத்தாள நண்பர் திரு சு. இராஜநாயகன் அவர்களுக்கு நன்றி.

இந்த வரிசையில் பாரதக் கதையும் பின்னால் வெளிவரும்.

அன்புடன்
— வரதர்

யாழ்ப்பாணம்
10 - 9 - 93

# இராமன் கதை

## 1. இராமன் பிறந்தான்

வட இந்தியாவிலே கோசலம் என்று ஒரு நாடு இருந்தது. அதன் தலைநகரம் அயோத்தி.

ஒரு காலத்தில் தசரதன் அந்த நாட்டை ஆண்டான். அவன் அரசர்களுக் கெல்லாம் அரசன்; பெரும் செல்வம் படைத்தவன்; சிறந்த அறிஞன்; குணவான்; வீரத்திலும் இணை இல்லாதவன்; நீதி தவறாதவன்; குடிகளைத் தன் குழந்தைகள் போலக் காப்பவன்.

அவன் புகழ் எங்கும் பரந்திருந்தது.

அவனுக்கு மனைவியர் மூவர். மூத்தவள் கோசலை; மற்றவள் கைகேசி; இளையவள் சுமித்திரை மூவரும் இராச குமாரிகள்; அருமையான குணமுள்ளவர்கள்; அழகிலும் இணையற்றவர்கள். அரசன் இவர்களையும் தன் செல்வமாகவே காப்பாற்றினான்.

தசரதனுக்கு ஒரு குறையுமில்லை. எல்லாமிருந்தன ஆனால் பிள்ளையில்லை. அரசன் இந்தக் குறையைக் குலகுருவான வசிட்டரிடம் சொன்னான்.

அதற்கு ஒரு யாகம் செய்ய வேண்டும் என்றார் வசிட்டர். அரசன் ஆறுதலடைந்தான். ரிஷியசிருங்கர் என்ற முனிவரே அந்த யாகத்தைச் செய்யவேண்டும் என்று வசிட்டர் சொன்னார்.

ரிஷியசிருங்கரை மரியாதையாக அழைத்து வந்தார்கள். அந்த முனிவர் சரயு நதிக் கரையில் யாகத்தைச் செய்தார்.

அதன் பயனாகச் சில மாதங்களுக்குள் மூன்று மனைவியரும் பிள்ளைகளைப் பெற்றார்கள். கோசலையிடம் இராமன் பிறந்தான். கைகேசி பரதனைப் பெற்றாள். சுமித்திரை இலக்குவனையும் சத்துருக்கனையும் பெற்றாள்,

## 2. தாடகையைக் கொன்றான்

குழந்தைகள் வளர்ந்து வந்தார்கள். நால்வரும் ஒருதாய் பெற்ற பிள்ளைகள் போலவே அன்பாக இருந்தார்கள். அவர்களுள்ளும் இராமனை இலக்குவன் ஒருநாளும் விட்டு நீங்கான். அப்படியே பரதனைச் சத்துருக்கனும் பிரிவதில்லை.

சிறுவர்கள் வசிட்டரிடம் எல்லாக் கலைகளையும் படித்தார்கள். யானை ஏற்றம், குதிரை ஏற்றம், ஆயுதப் பயிற்சி எல்லாவற்றிலும் தேர்ந்தார்கள். இராச குமாரர்களைக் கண்டு உலகமே மகிழ்ந்தது.

ஒரு நாள் விசுவாமித்திர முனிவர் தசரதனிடம் வந்தார் அரசன் எழுந்து வணங்கி முனிவரை உபசரித்தான். பிறகு, "எதற்காக வந்தீர்கள்?" என்று வணக்கத்தோடு கேட்டான். "அரசனே, நான் ஒரு யாகம் செய்யப்போகிறேன். அதை அழிக்க அரக்கர் வருவார்கள் அவர்களைக் கொன்று என் யாகத்தைக் காக்க வேண்டும். உன் மகன் இராமனை என்னோடு அனுப்பு" என்றார் அந்த முனிவர்.

தசரதன் நடுங்கிப் போனான். "சுவாமி இராமன் சிறுவன். நானே படையோடு வருகிறேன். உத்தரவு கொடுங்கள்" என்று மன்றாடினான் விசுவாமித்திரருக்குக் கோபம் வந்து விட்டது.

வசிட்டர் தசரதனுக்கு ஆறுதல் சொன்னார். பிறகு அரசன் இராமனை அந்த முனிவரோடு அனுப்பினான்.

இராமனோடு இலக்குவனும் சென்றான். நகரத்தையும் நாட்டையும் கடந்தார்கள். அப்பால் பெரிய காடு. முனிவர் கதைகள் சொல்லிக் கொண்டு முன்னால் நடந்தார்.

அப்பொழுதுதான் தாடகை வந்தாள். அவள் தூரத்தில் வரும்போதே காடு நடுங்கியது.

இராமனைப் பார்த்து முனிவர் சொன்னார்: "இராமா, இவளே தாடகை என்னும் அரக்கி மிகவும் கொடியவள், இவளால் இறந்தவர்கள் பலர். பெண்ணென்று பாராமல் உடனே அம்பு தொடு. அதுவே தருமமாகும்."

இராமன் வில்லை வளைத்து அம்பை ஏவினான். அந்த அம்பு தாடகையின் உடலைப் பிளந்து சென்றது. காடு அதிர மலைபோல விழுந்து அவள் இறந்தாள்,

## 3. சீதையை மணந்தான்

மூவரும் ஆசிரமத்தை அடைந்தார்கள். யாகம் ஆரம்பமானது. இராமனும் இலக்குவனும் அதைக் காத்து நின்றார்கள். தாடகையின் மக்களான சுபாகு, மாரீசன் என்பவர்கள் யாகத்தை அழிக்க வந்தார்கள் இராமன் வில்லை வளைத்து அம்பு தொடுத்தான். சுபாகு இறந்தான். மாரீசன் தப்பி ஓடிவிட்டான்.

யாகம் குறைவில்லாமல் முடிந்தது. பிறகு முனிவர். இளைஞர்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு மிதிலைக்குப் புறப்பட்டார். வழியில் கௌதம முனிவர் ஆசிரமம் இருந்தது. அங்கே கௌதமரது மனைவியான அகலிகையின் துன்பத்தை மாற்றினார்கள் பிறகு மூவரும் மிதிலையை நோக்கி நடந்தார்கள்.

மிதிலையை சனகராசன் ஆண்டான். சீதை அவனுடைய மகள். அழகில் அவளுக்கு ஒருவரும் நிகர் இல்லை. குணத்திலும் அப்படியே. "நான் பூசித்து வரும் வில்லை வளைக்கும் வீரனுக்கே சீதையைக் கொடுப்பேன்" என்று சனகன் அறிவித்திருந்தான்.

முனிவரும் இராம இலகுமணர்களும் மிதிலைக்கு வந்ததும் அரசன் வரவேற்றான். முனிவர் இராமனையும் இலக்

குவனையும் பற்றி அவனுக்குச் சொன்னார். பிறகு, "உன்னிடமிருக்கும் வில்லை வளைத்துச் சீதையை மணக்கக் கூடியவன் இந்த இராமனே" என்றார்.

சனகன் வில்லை எடுத்தான் இராமன் அதை வாங்கி வளைத்து முறித்து விட்டான். எல்லோரும் அதிசயப் பட்டார்கள். சனகன் பெரும் மகிழ்ச்சி கொண்டான்.

பிறகு தசரதன் முதலிய எல்லோரும் மிதிலைக்கு வந்தார்கள்.

ஒரு நல்ல நாளில் இராமன் சீதையை மணந்தான்.

## 4. தசரதன் இறந்தான்

சில வருஷங்கள் கழிந்தன. தசரதன் காட்டுக்குச் சென்று தவம் செய்ய ஆசைப் பட்டான். அதை வசிட்டருக்குச் சொன்னான். அவரும் சம்மதித்தார்.

இராமனுக்கு முடிசூட்ட ஆயத்தஞ் செய்தார்கள்.

கைகேசிக்கு மந்தரை என்று ஒரு தோழி இருந்தாள். அவள் முதுகு கூனியாய் இருந்த படியால் அவளைக் கூனி என்றும் சொல்வார்கள். அவளுக்கு இராமனைவிடப் பரதனிடம் பிரியம் அதிகம். அவள் பரதனுக்கே முடிசூட்ட வேண்டும் என்று கைகேசியிடம் சொன்னாள். முதலில் கைகேசி கோபித்தாள். ஆயினும் கூனி பல காரணங்களை எடுத்துச் சொன்ன பிறகு சம்மதித்து விட்டாள்.

அன்று தசரதன் வரும் போது கைகேசி அழுபவள் போல, துக்கத்தோடிருந்தாள்.

"ஏன் இப்படி இருக்கிறாய்? உனக்கு தீமை செய்தவன் எவன்?" என்று அரசன் கேட்டான்.

"எனக்கு ஒருவரும் தீங்கு செய்யவில்லை. நீங்கள் இரண்டு வரம் தரவேண்டும். அப்போதுதான் என் துக்கம் மாறும்" என்று அவள் சொன்னாள்.

‘‘எதை வேண்டுமானாலும் கேள். சத்தியமாகத் தருகிறேன்’’ என்று அரசன் சொல்லிவிட்டான்.

உடனே கைகேசி கேட்டாள்:

‘‘பரதனுக்கு முடிசூட்ட வேண்டும். இராமன் பதினான்கு வருஷம் தவஞ் செய்யக் காட்டுக்குப் போக வேண்டும்!’’

அரசன் திடுக்கிட்டுப் போனான். இராமனைப் பிரிய அவனால் முடியவில்லை. கடைசியில், ‘‘பரதன் முடி சூட்டட்டும். இராமன் காடு போக வேண்டாம். இதற்காவது சம்மதிக்கிறாயா?’’ என்று கைகேசியிடம் மன்றாடினான்.

அவள் மறுத்து விட்டாள். ‘‘நீங்கள் சொன்ன சொல் தவறலாமா?’’ என்று கேட்டாள்.

பிறகு இராமனை வரச்சொல்லி, ‘‘நீ பதினான்கு வருஷம் காட்டிலே தவம் செய்து வரவேண்டும். இது அரசருடைய விருப்பம்’’ என்று சொல்லி அனுப்பினாள்.

மறு பேச்சின்றி இராமன் சீதையோடும் இலக்குவனோடும் காட்டுக்குப் புறப்பட்டான்.

‘அரசாள்வதை விடத் தவஞ் செய்வது நல்லது. தம்பிக்கு அரசு கிடைத்தது அதைவிட நல்லது’ என்று இராமன் சந்தோஷப்பட்டான்.

மூவரும் கங்கைக் கரையை அடைந்தார்கள். கங்கையைக் கடக்க இராமனிடம் அன்புள்ள குகன் என்ற வேடன் உதவி செய்தான். ‘‘பிறகு உன்னிடம் வருவோம்’’ என்று அவனிடம் சொல்லி விட்டு, நேராகச் சித்திர கூடத்துக்குப் போனார்கள். அங்கே அழகான ஒரு தவ வீட்டை இலக்குவன் கட்டினான். அதிலே இராமன் சீதையோடும் தங்கினான்.

இராமனைப் பிரிந்து அயோத்தி அழுதது. தசரதனும் முதலில் அழுதான். பிறகு துடித்துத் துடித்து இறந்து போனான்.

# 5. பரதன் அரசாண்டான்

பரதனும் சத்துருக்கனனும் கேகய நாட்டில் இருந்தார்கள். வசிட்டர் அவர்களை உடனே அயோத்திக்கு வரும்படி ஆள் அனுப்பினார். அவர்களும் உடனே புறப்பட்டு வந்தார்கள்.

அயோத்தி நகரம் பாழாய்க் கிடந்தது. பரதன் நேராகத் தாயிடம் சென்றான். கைகேசியே அவனுக்கு எல்லாவற்றையும் சொன்னாள். அண்ணன் காடு சென்றான், தந்தை இறந்தார் என்றதும் அவன் தேம்பித் தேம்பி அழுதான். இவற்றிற்குக் கராணமான தாயை வெறுத்தான் வசிட்டர், கூட இருந்து ஆறுதல் சொன்னார்.

கடைசியில். ''அண்ணனை அழைத்து வருவேன்'' என்று காட்டுக்குப் புறப்பட்டான். அவனோடு வசிட்டரும் தாய்மாரும் போனார்கள்.

பரதன் தவ உடை உடுத்து நடந்தே சென்றான். கங்கையைக் குகனது உதவியால் கடந்து சித்திரகூடம் சென்றான்.

சித்திரகூடம் அழகான மலைநாடு. அங்கே எப்பொழுதும் மயில்கள் ஆடும். பறவைகள் பாடும். மரங்கள் மலர்ந்து பழுத்திருக்கும். வெள்ளி அருவிகள் எங்கும் ஓடும்.

அங்கே பரதன் இராமனைக் கண்டு அவன் காலடியில் விழுந்து அழுதான், பிறகு, ''அயோத்திக்கு வாருங்கள். நீங்களே அரசாள வேண்டும் அப்போதுதான் என் துக்கம் ஆறும்'' என்று வேண்டினான்.

அதைக் கேட்டு இராமன் சொன்னான்: ''பரதா, தந்தையின் சொல்லை நான் மீறலாமா? நீ போய் அரசை ஆள். சனங்களுக்கு என்னை விட நீ அருமையானவன். பதினான்கு வருஷம் முடிந்ததும் நான் அயோத்திக்கு வருவேன்.''

பரதன் பிறகும் அழுதான். அண்ணன் பலவாறு சொல்லித் தேற்றினான்.

கடைசியில் பரதன் அண்ணனுடைய பாதுகைகளை வாங்கிக் கொண்டு திரும்பினான். அயோத்திக்கு அவன் போகவில்லை. நகரத்துக்கு வெளியே நந்திக் கிராமம் என்ற ஊர் இருந்தது. அங்கே அண்ணனின் பாதுகைகளுக்கு முடி சூட்டினான் அண்ணனைக் காணப் பதினான்கு வருஷமும் எப்போது முடியும் என்று காத்திருந்தான்.

## 6. சூர்ப்பணகை வந்தாள்

இராமன் சித்திரகூடத்தை விட்டுத் தண்டகவனத்துக்குச் சென்றான். அந்த வனம் மரங்களடர்ந்து பயங்கரமாயிருந்தது. அங்கே கொடிய அரக்கர் பலர் இருந்தார்கள். அவர்கள் தவமுனிவர்களை எப்பொழுதும் வருத்தினார்கள்.

ஒரு நாள் விராதன் என்ற அரக்கன் சீதையைத் தூக்கிக் கொண்டு ஓடினான். இராம பாணம் அவனைக் கொன்று தள்ளியது.

மூவரும் அந்த வனத்திலுள்ள முனிவர்களைக் கண்டு வணங்கினார்கள். தசரதனது நண்பனான சடாயுவையும் கண்டார்கள். அங்கிருந்தும் கோதாவரி நதியை அடைந்தார்கள்.

அந்த நதிக் கரையிலே பஞ்சவடி என்ற அழகிய சோலை இருந்தது. அங்கே தங்கினார்கள்.

ஒரு நாள் சூர்ப்பணகை என்ற அரக்கி அங்கே வந்தாள். அவள் இலங்கையை ஆளும் இராவணனுடைய தங்கை. அழகனான இராமனைக் கண்டதும் அவளுக்கு ஆசை மூண்டது. தானும் ஓர் அழகியாக மாறி, ''என்னைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்'' என்று கெஞ்சினாள். இராமன் மறுத்து விட்டான். 'சீதை இருக்கு மட்டும் இவன் என்னை விரும்பான் என்று அந்த அரக்கி எண்ணினாள். பிறகு சீதையைத் தூக்கிச் செல்லப் பார்த்தாள். அதைக் கண்ட இலக்குவன் அவள் மூக்கை அறுத்துக் கலைத்து விட்டான்.

இதைக் கேட்ட அரக்கர்களான கரன் முதலானவர்கள் ஓடி வந்தார்கள். இராமனோடு சண்டை செய்து இறந்தார்கள். சூர்ப்பணகை அழுது கொண்டு தன் அண்ணனான இராவணனிடம் ஓடினாள்.

## 7. சீதை சிறைப்பட்டாள்

இலங்காபுரி, இராவணஇராச்சியத்தின் தலை நகரம். அங்கே ஒரு மண்டபத்தில் எல்லோரும் சூழ இராவணன் இருந்தான். அப்பொழுது சூர்ப்பணகை தலைவிரி கோலமாய் வந்து சேர்ந்தாள் வந்ததும் தமயனது காலடியில் விழுந்து புலம்பினாள். அதைக் கண்ட இராவணன் துள்ளி எழுந்தான் இலங்காபுரியே நடுங்கியது

சூர்ப்பணகை கண்ணீர் சொரியக் கதறியபடி சொன்னாள்:

''பஞ்சவடியில் இராமன் என்று யாரோ ஒரு தவசி இருக்கிறான். அவனுக்கு ஒரு மனைவி. அவள் பெயர் சீதை. சீதையின் அழகைச் சொல்ல என்னால் முடியாது. மிகச் சிறந்த அழகி அவளைக் கண்டதும் உன்னை நினைத்தேன். பிறகு தூக்கிக் கொண்டு ஓடி வந்தேன். இராமனின் தம்பி எனக்கு இப்படிச் செய்து விட்டான் எனக்காக் கரன் முதலானவர்கள் சண்டைக்குப் போய், செத்துப் போனார்கள் ''

இராவணனுக்குச் சீதையின் நினைவுதான் இருந்தது. மற்றவைகளை மறந்து போனான். எப்படியும் சீதையைக் கொண்டு வந்துவிட வேண்டும் என எண்ணிவிட்டான். மாரீசன் என்ற தன் மாமனோடு பஞ்சவடிக்கு வந்தான்.

மாரீசன் இராவணன் சொற்படி பொன்மானாகி சீதை காணும்படி உலாவினான் சீதை அந்த மானைப் பிடித்துத் தரும்படி தன் கணவனைக் கேட்டாள். இராமன் மானுக்குப் பின்னாலே சென்றான். மாயமான் வேகமாக ஓடியது

இராமன் சந்தேகப்பட்டு ஓர் அம்பை எய்தான். மான், ''இலக்குவனே!'' என்று கத்திக் கொண்டு விழுந்து செத்தது.

'இலக்குவனே! என்ற சத்தம் சீதைக்கும் கேட்டது: ''தம்பீ ஓடு. பார்த்துவா'' என்று இலக்குவனைச் சீதை அனுப்பினாள் இலக்குமணன் சென்றதும் கபட சந்நியாசியாக இராவணன் வந்தான். தனித்திருந்த சீதையைத் தூக்கித் தன் விமானத்திலே வைத்துக் கொண்டு கிளம்பினான். வழியில் சடாயு தடுத்துச் சண்டையிட்டான். சடாயுவால் தடுக்க முடியவில்லை. காயத்துடன் கீழே விழுந்து கிடந்தான்.

இராவணன் சீதையோடும் இலங்கைக்கு வந்து சேர்ந்தான்.

சீதை துக்கத்தாலும் கோபத்தாலும் சீறிக் கொண்டிருந்தாள்.

எப்படியும் கொஞ்ச நாட்களில் ஆறி விடுவாள் என்று இராவணன் எண்ணினான்.

பிறகு அசோக வனம் என்ற தன் பூஞ்சோலையில் சீதையைக் காவலில் வைத்தான்.

## 8. சபரியைக் கண்டார்கள்

இலக்குவனைக் கண்டதும், ''ஐயோ, சீதை தனியாகவா இருக்கிறாள்?'' என்று இராமன் பயந்தான். இரண்டு பேருமாகவே தவச் சாலையை நோக்கி ஓடி வந்தார்கள். அங்கே சீதையைக் காணவில்லை எங்கும் தேடினார்கள். இராமனால் துக்கத்தைத் தாங்க முடியவில்லை.

வழியில், ஒரு காட்டிலே காயம் பட்டுக் கிடந்த சடாயுவைக் கண்டு இராமனும் இலக்குவனும் கிட்ட ஓடிப் போனார்கள். சடாயு சீதையை இராவணன் கொண்டு போன கதையைச் சொல்லிவிட்டு இறந்து போனான். இராமன் சடாயு

வைத் தகனம் செய்து, மற்றக் கடன்களையும் செய்து முடித்தான்.

பிறகு பல இடங்களிலும் தேடித்திரிந்தார்கள். ஒரு காட்டில் கபந்தன் என்ற அரக்கன் அவர்களை விழுங்க வந்தான். இராமபாணம் அவனையும் தொலைத்தது. அங்கிருந்தும் பம்பைக் கரையைப் போய்ச் சேர்ந்தார்கள்.

பம்பை அழகான ஓர் தடாகம். அதன் பக்கத்தில் இருந்த காட்டிலே சபரி இருந்தாள். அவள் ஒரு வேடுவக் கிழவி பெருந் தவத்தாய். சபரி இராமனைக் காணும் ஆவலோடு நல்ல பழங்களை எல்லாம் சேர்த்து வைத்துக் கொண்டு காத்திருந்தாள். இராமனும் தம்பியும் அங்கு வந்ததும் அவர்களை உபசரித்து, தான் சேர்த்து வைத்திருந்த கனிகளையும் கொடுத்தாள். தாயிலும் இனிய அந்த மூதாட்டியைக் கண்டு இராமன் பெரிதும் சந்தோஷப் பட்டான். பிறகு இந்தத் தவத் தாயிடம் விடை பெற்றுக் கொண்டு இருசியமூக மலைக்குச் சென்றார்கள்.

## 9. வாலி இறந்தான்

இருசியமூக மலைக்குப் பக்கத்திலே கிஷ்கிந்தை என்ற நகரம் இருந்தது. அந்த நகரத்திலிருந்து வாலி என்ற வீரன் அரசாண்டான். அவன் பெயரைக் கேட்டால் இராவணன் கூட நடுங்குவான்.

இந்த வாலிக்குச் சுக்கிரீவன் என்றொரு தம்பி இருந்தான், வாலி சுக்கிரீவனின் மனைவியையும் பறித்துக் கொண்டு அவனையும் அரண்மனையை விட்டுத் துரத்தி விட்டான். சுக்கிரீவன் மகாத்மாவான அனுமன் முதலியவர்களுடன் இருசியமூக மலையில் வசித்து வந்தான்.

இராமனையும் இலக்குவனையும் கண்டு சுக்கிரீவன் பயந்து ஓடி விட்டான். அனுமன் நேராக வந்து வணங்கி, தான் இன்னான் என்பதைச் சொன்னான். அவர்கள் இன்னா

ரென்பதையும் தெரிந்து கொண்டான். பிறகு சுக்கிரீவனை யும் கூட்டி வந்து சிநேகம் செய்து வைத்தான்.

சுக்கிரீவன் இராமனது துயரத்தைக் கேட்டுத் தானும் வருந்தினான். இராவணன் எடுத்துச் சென்ற போது கழற்றி எறிந்த ஆபரணங்களையும் கொண்டு வந்து கொடுத்தான். அந்த ஆபரணங்களைக் கண்டதும் இராமன் அழுது மயங்கிப் போனான். மயக்கம் தெளிந்ததும், "தேவியை எப்படியும் தேடிக் கண்டு தருவோம்? நீங்கள் துக்கப்பட வேண்டாம்" என்று சுக்கிரீவன் ஆறுதல் சொன்னான்.

சுக்கிரீவனுக்குத் துரோகம் செய்த வாலியை இராமபாணம் கொன்றது. சாகும் பொழுது வாலி தன் பிசகுக்காக வருந் தினான். தன் மகன் அங்கதனையும் இராமன் கையில் அடைக் கலமாகக் கொடுத்தான். பிறகு இராமனை வணங்கிக் கொண்டே அவன் இறந்தான்.

## 10. அனுமன் சீதையைக் கண்டான்

இலக்குவன் சுக்கிரீவனுக்கு முடி சூட்டினான். வாலியின் மகனான அங்கதன் இளவரசனானான்.

மாரி காலம் முடிந்ததும் சுக்கிரீவனுடைய வீரர்கள் எல்லாத் திசைகளிலும் சீதையைத் தேடிப் புறப்பட்டார்கள். இராமன் அனுமனிடம் சீதையின் அடையாளங்களைச் சொல்லி, தன் மோதிரத்தையும் கொடுத்து விட்டான்.

வீரர்கள் எங்கும் தேடி அலைந்தார்கள். சீதையைக் காணவில்லை. கடைசியில் எல்லாரும் மகேந்திர மலையில் வந்து சேர்ந்தார்கள். அங்கே சடாயுவின் தமையனான சம்பாதியைக் கண்டார்கள் கிழவனான சம்பாதியே இராவணன் சீதையை இலங்கையில் அசோக வனத்திலே காவலில் வைத்திருக்கிறான் என்று சொல்லிக் கொடுத்தான்.

இலங்கைக்குப் போவதானால் கடலைத் தாண்டிப் போக வேண்டும்.

கடலைக் கடப்பது எப்படி என்று எல்லோரும் துக்கத்தி லாழ்ந்தார்கள். கடைசியில் மகாத்மாவும் சிறந்த வீர னுமாகிய அனுமனே புறப்பட்டான். இராம நாமத்தை உச்சரித்துக் கொண்டே அந்த மகா வீரன் கடலைத் தாண்டி விட்டான்.

அனுமன் இலங்கையில் எல்லா இடங்களிலும் தேடினான். நகரிலும் மாளிகைகளிலும் பார்த்தான். தேவியைக் சாண வில்லை. கடைசியில் அசோகவனம் என்ற சோலைக்குள் நுழைந்தான்.

சீதை அங்கே இருந்தாள். அவள் கூந்தல் கலைந்து கிடந்தது. முகத்தில் கண்ணீர் வடிந்து காய்ந்திருந்தது. உடம்பு வாடி அழுக்கடைந்து கிடந்தது.

அனுமன் நன்றாக உற்றுப் பார்த்தான். இராமன் சொன்னபடி அவள் இருந்தாள் ''என் தவப் பயனால் தேவியைச் கண்டு விட்டேன்'' என்று சந்தோஷப் பட்டான். கூத்தும் ஆடினான்.

## 11. இலங்கை எரிந்தது!

அதற்குள் இராவணன் அங்கே வந்து சீதைக்குக் கிட்டப் போனான். தன் பெருமையையும் மறந்து மன்றாடினான். ''இராமன் இனி வரான்; அவனை மறந்துவிடு. நீ எனக்கு மனைவியானால் இலங்கைக்கு இராணியாவாய'' என்று எல்லாஞ் சொன்னான்.

சீதை அவனைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. ''மூடனே, நாய் போல எண்ணாதே. உன் சுற்றத்தோடு அழிய ஏன் வழி தேடுகிறாய்?'' என்று புத்தியும் சொன்னாள்.

இராவணனுக்குக் கோபம் வந்து விட்டது. நீ என் எண்ணத்துக்கு இசையா விட்டால் கொன்று விடுவேன்'' என்று சொல்லி விட்டுத் திரும்பிச் சொன்றான்.

திரிசடை என்ற அரக்கர் குலப்பெண் சீதைக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தாள்.

பிறகு அனுமன் சீதையின் முன்பு வந்தான். அவள் பாதங்களில் தலை வைத்து வணங்கிச் சொன்னான்:

''தாயே, நான் இராம பிரானது தூதுவன். தங்களைத் தேடியே வந்தேன். தங்கள் கணவரின் மோதிரம் இதோ இருக்கிறது.''

அனுமன் அந்த மோதிரத்தை எடுத்து, இரண்டு கைகளி னாலும் கொடுத்தான். சீதை அதைக் கண்டாள். அவள் எல்லாத் துக்கங்களையும் மறந்து பெரிய ஆறுதலடைந்தாள்.

பிறகு தன்னிடமிருந்த சூடாமணியை அனுமனிடம் அடையாளமாகக் கொடுத்து, ''ஒரு மாதத்துக்குள் வந்து என்னை மீட்கச் சொல்'' என்று சொல்லி, அவனை வாழ்த்தி அனுப்பினாள்.

அனுமான் உடனே இராமனிடம் புறப்படவில்லை. இரா வணனை நேரிலே பார்க்க ஆசைப்பட்டான். அதற்காக அசோகவனம் என்ற அந்தச் சோலையை அழித்தான். இரா வணன் அதை அறிந்து சம்பு, மாலி முதலிய வீரர்களை ஏவினான். அவர்கள் அனுமான் கையால் இறந்தார்கள். கடைசியில் இராவணன் மகனான இந்திரசித்து வந்து அவ னைப் பிடித்துக் கட்டிக் கொண்டு போனான்.

இராவணன் பெருங் கோபத்தோடு இருந்தான். அனு மனைக் கண்டதும் மிக இழிவாகப் பேசினான். அனுமனோ பெரிய அறிஞன். அடக்கத்தோடு இராவணனுக்கு நீதிகளைக் கூடச் சொன்னான் அனுமனது தர்மப் பேச்சு அந்த மூட னது கோபத்தை மேலும் வளர்த்து விட்டது. அதனால், ''இவனைக் கொல்லுங்கள்'' என்று கூச்சலிட்டான். அப் போது அவன் தம்பியும், தர்மாத்மாவுமான விபீஷணன் குறுக்கே நின்று, ''தூதுவனைக் கொல்லலாகாது. அது பெரும் பழி'' என்று தடுத்தான். அப்போதும் இராவணன் கோபம் ஆறவில்லை. ''இவன் அவயவம் ஒன்றை நெருப்பினால்

பொசுக்கிக் காயப்படுத்தி அனுப்புங்கள்'' என்று கட்டளை இட்டான்.

அனுமனுடைய வாலிலே துணியைச் சுற்றி, அதன்மீது எண்ணெயை ஊற்றி அரக்கர்கள் நெருப்பு வைத்தார்கள். அனுமன் அந்த நெருப்பையே கொண்டு அழகான இலங்காபுரி முழுவதையும் எரித்துவிட்டுத் திரும்பினான்.

## 12. இலங்கைக்கு வந்தார்கள்

அனுமனை அங்கதன் முதலியவர்கள் வழியில் கண்டு ஆனந்தப் பட்டார்கள். பிறகு எல்லோரும் இருசியமூக மலைக்கு இராமனிடம் வந்தார்கள். அனுமன் முன்னே ஓடி வந்து, ''தேவியைக் கண்குளிரக் கண்டு வந்தேன்'' என்று சொல்லி அவள் தந்த சூடாமணியையும் கொடுத்தான். இராமனுக்கு அது தன் தேவியை நேராகக் கண்டது போல இருந்தது.

இராமனும், தம்பியும், சுக்கிரீவனும், அனுமன், அங்கதன், சாம்பவன், நீலன் முதலிய வீரர்களும் இலங்கைக்கு வழி நடந்தார்கள். அவர்களைச் சூழ்ந்து சுக்கிரீவனது பெரும்படை நடந்து வந்தது. எல்லாரும் தென் கடலின் கரைக்கு வந்து சேர்ந்தார்கள்.

இதற்குள் எரிந்த இலங்கையை இராவணன் மயனைக் கொண்டு புதுப்பித்து விட்டான். நகரத்தைச் சாம்பலாக்கிய இராம தூதனை எப்படியும் வதைக்க வேண்டும் என்று அவன் துடித்தான். இராவணனுடைய மந்திரிகளும் சேனைத் தலைவரும் மற்றவர்களும், ''இதோ பிடித்து வருகிறோம்; தின்னுகிறோம்'' என்று கூத்தாடினர். அப்பொழுதும் தர்மாத்மாவான விபீஷணன் குறுக்கிட்டு இதைச் சொன்னான்:

''அண்ணா, இலங்காபுரியை அனுமன் எரிக்கவில்லை. நீ ஒருத்தியைச் சிறையில் போட்டிருக்கிறாயே, அவள் யார் தெரியுமா? அவளே எல்லா உலகத்துக்கும் தாய். அவள்

கற்புத்தான் உனது நகரை எரித்தது என்பதை மறவாதே அவள் கணவன் பரம்பொருள். இவர்களை மனிதர் என்றெண்ணி அழிவு தேடுகிறாய்.''

இராவணனுக்கு இந்தத் தர்மப் பேச்சு கொஞ்சமும் பிடிக்கவில்லை.

''நீ எனக்குப் புத்தியுமா சொல்ல வந்து விட்டாய்? இப்பொழுதே இவ்விடத்தை விட்டு ஓடு'' என்று அவன் சீறினான்.

விபீஷணன் உடனே அந்தப் பாபிகளின் உறவை அறுத்துக் கொண்டு புறப்பட்டு இராமனிடம் வந்தான். இராமனைத் தன் கண்குளிர மனம்குளிரக் கண்டு ''இராமா, சரணம்'' என்று வேண்டுதல் செய்தான்.

இராமன் அவனை அருள் ஒழுகப் பார்த்து, ''விபீஷணா, வா. உனக்கு இலங்கை அரசையும் தந்தேன்'' என்று தன்னோடு சேர்த்துக் கொண்டான்.

பிறகு எல்லோரும் சேது அணையைக் கட்டி, கடலைக் கடந்து இலங்கைக்கு வந்து சுவேல மலைச் சாரலில் தங்கினரர்கள்.

## 13. முதல் நாள் போர்

இராமன் முதலில் அங்கதனைத் தூதாக இராவணனிடம் அனுப்பினான். அங்கதனைக் கண்டதும், ''நீ யார்?'' என்று இராவணன் அதட்டிக் கேட்டான்.

''நான் உன்னை அவமானஞ் செய்த வீரனாகிய வாலியின் மகன்'' என்றான் அங்கதன்.

அதைக் கேட்ட இராவணன் சந்தோஷத்தோடு சொன்னான்: ''தந்தையைக் கொன்றவனுக்கா நீ தொண்டு செய்

கிறாய்? வாலி என் நண்பன் அவன் மகன் நீ. ஆதலால் நீ எனக்கும் மகன். மகனே, இந்த இராச்சியத்தை உனக்கே தருவேன் சீதையையும் பெற்றேன் உன்னையும் மகனாகப் பெற்று விட்டேன். நான் பாக்கியவான் அல்லவா?''

இதைக் கேட்ட அங்கதன் ''நாய் தரச் சிங்கம் எதையும் வாங்குமா? எனக்கு ஓர் அரசு நீ தர நான் அதை வாங்கு வேனா? சீதையை விடு. அல்லது நாளை போர்க்களம் வந்து உயிரை விடு'' என்று சொன்னான்.

இராவணன் அவமானத்தால் கொதித்தான். ''இவனைக் கொல்லுங்கள்'' என்று தன் வீரர்களை ஏவினான். வந்தவர் களைக் கொன்று தள்ளிவிட்டு அங்கதன் இராமனிடம் வந் தான். நடந்த எல்லாவற்றையும் சொன்னான்.

மறு நாள் இராமனும், இலக்குவனும், சுக்கிரீவன், அனு மன் முதலான எல்லா வீரர்களும் இராவணனது கோட்டை யைச் சூழ்ந்து கொண்டார்கள். மதில்கள் இடிக்கப்பட்டன. அகழிகள் அழிக்கப்பட்டன. இராவணனது படைகளும் எதிர்த்து மடிந்தன.

இராவணன் ஆவேசங் கொண்டு போர் புரிய வந்தான். அவனும் பெரிய வீரன். ஆனாலும் கடைசியில் தேர், சாரதி, வேல், வாள் முதலிய எல்லாம் இழந்து தனியனானான்.

அந்த நிலையில் நின்ற இராவணனைப் பார்த்து இரா மன் சொன்னான்:

இராவணா எல்லாமிழந்து தனித்து விட்டாய். இப்படி நிற்கிற உன்னைக் கொல்ல எனக்கு மனம் வரவில்லை. இன்று போய் நாளை வா.

இராவணன் உயிரற்ற பிணம்போல நிலத்தைப் பார்த்த படியே தலை குனிந்து தன் நகரத்துக்குள் நுழைந்தான்.

# 14. கும்பகர்ணன் மாண்டான்

இராவணன் தன் மூலபலச் சேனையை வருவிக்கும்படி எல்லாத் திசைகளுக்கும் ஆளனுப்பினான். பிறகு, மன முடைந்து விழுந்து கிடந்தான்.

அப்பொழுது மகோதரன் என்ற முதல் மந்திரி வந்து, "அரசே, தம்பி கும்பகர்ணன் இருக்கிறான். அவனிருக்கும் போது துக்கமேன்?" என்று தேறுதல் சொன்னான்.

இராவணன் கும்பகர்ணனிடம் ஆட்களை ஏவினான். கும்பகர்ணனோ பெருந் தூக்கக்காரன். பலர் சேர்ந்து கஷ்டப் பட்டு எழுப்பினார்கள் அவன் எழுந்து வந்ததும், "தம்பீ, இராமன் போருக்கு வந்திருக்கிறான். போய் வெற்றியோடு வா" என்று சொன்னான்.

"அண்ணா, இன்னும் சீதையை விடவில்லையா? நமது குலம் நாசமாகப் போகிறதே. இராமனை வெல்லலாம் என்றா எண்ணினாய்?" என்று கும்பகர்ணன் தமயனைக் கேட்டான்.

"நீ ஒரு வீரனா? உன் தம்பியைப் போல அவர்களைக் கும்பிட்டு உயிர்வாழ ஓடு" என்று இராவணன் கும்பகர்ணனையும் ஏசத் தொடங்கி விட்டான்.

கும்பகர்ணன் உடனே போர்க்கோலம் பூண்டு புறப்பட்டான். போகும் போது, "என்னை அந்த மனிதர்கள் வென்றால் உன்னையும் வென்று விடுவார்கள். நான் இறந்த பிறகாவது சீதையை விட்டுவிடு" என்று சொல்லிச் சென்றான்.

கும்பகர்ணனைக் கண்டவுடனே இராமனுடைய சேனை நடுங்கிப் போயிற்று. அப்பொழுது இராமன் விபீஷணனைப் பார்த்து, "இவன் யார்?" என்று கேட்டான்.

விபீஷணன் சொல்லுகிறான்: "இவன் என் அண்ணன்; இராவணனுக்குத் தம்பி. பெரிய வீரர்களுக் கெல்லாம் வீரன்.

நீதி தவறாதவன். நல்ல அறிஞன்.''

''அப்படியானால் அவனையும் நம்முடன் சேர்த்துக் கொள்ளலாமே'' என்றான் இராமன்.

விபீஷணன் கும்பகர்ணனிடம் நேராகவே சென்றான்.

தம்பியைக் கண்டதும் கும்பகர்ணன் சந்தோஷப்பட்டு, ''தம்பி, இராமனை விட்டு ஏன் வந்தாய்?'' என்று கேட்டான்.

உடனே விபீஷணன் அவனை வணங்கி ''அண்ணா, நீ தருமமும் நியாயமும் தெரிந்தவன் அநீதியாகப் போர் செய்யாதே. இராமன் பக்கம் நீதி இருக்கிறது. நீயும் எங்கள் பக்கம் வருவதே தருமமாகும்'' என்றான்.

அதைக் கேட்ட கும்பகர்ணன். ''விபீஷணா, நீ தரும வழியில் நிற்க வேண்டியவன். நானோ என் கடமையைச் செய்ய வந்தவன். என்னை இவ்வளவு வளர்த்துவிட்ட அண்ணன் நிலத்தில் செத்துக்கிடக்க என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. கடமையைச் செய்து சாகவே வந்திருக்கிறேன். நாங்கள் எல்லோரும் செத்த பிறகு எங்களுக்கு இறுதிக் கடன்கள் செய்ய நீ ஒருவனாவது இருக்க வேண்டும். நீ போ'' என்று சொல்லி அனுப்பி விட்டான்.

பிறகு இரண்டு பக்கத்துக்குமிடையில் கடும்போர் மூண்டது. இருபக்கத்திலும் பெருஞ் சேதங்கள் உண்டாயின. கடைசியில் இராமபாணம் கும்பகர்ணன் தலையை அறுத்துச் சமுத்திரத்தில் தள்ளியது.

## 15. இந்திரசித்து மடிந்தான்

மகோதரன் ஒரு மாயஞ் செய்தான். ஓர் அரக்கனை சீதையின் தந்தையான சனகராசனைப் போல உருமாற்றி, சீதைக்கு முன்னால் கொண்டுவந்து நிறுத்தினான். அந்த மாய சனகன், ''இராவணனை மணந்து கொள்'' என்று சீதைக்குப் புத்தி சொன்னான்.

"நீ மறுத்தால் உன் தந்தையைக் கொல்லுவோம்" என்றார்கள் அந்தக் கொடியவர்கள். சீதை துடித்தாள். அதற்குள் கும்பகர்ணன் செத்த கதை எங்கும் தெரிந்துவிட்டது, இராவணன் கேட்டதும் இலங்காபுரியே அதிரும்படி வாய் விட்டு அழுதான். பிறகு நடந்த சண்டையில் இராவணன் மகன் அதிகாயனை இலக்குவன் கொன்றான். அதிகாயனோடு அவன் சகோதரர் பலரும் செத்தொழிந்தார்கள்.

கடைசியிலேதான் மகாசூரனான இந்திரசித்து போருக்கு வந்தான் 'என் தம்பிமாரைக் கொன்ற இலக்குவனைக் கொல்வேன்' என்று ஆவேசத்தோடு யுத்த பூமியில் வந்து நின்றான். வெகு நேரமாக இலக்குவனும் அவனும் கடும்போர் செய்தார்கள். அற்புதமான அந்தப் போரைக் கண்டு உலகமே கலங்கியது. பிறகு நாக பாசத்தால் அந்த வீரன் இலக்குவன் முதலிய எல்லாரையும் கட்டிவிட்டான்.

மயங்கிக் கிடந்த தம்பியைப் பார்த்து இராமன் அழுதான். அதற்குள் கருடனது உதவியால் நாக பாசம் அறுந்தது.

இலக்குவனும் மற்ற வீரர்களும் எழுந்த செய்தியை இந்திரசித்து அறிந்து திரும்பவும் சண்டைக்கு வந்தான். சண்டை கோரமாக நடந்தது. கடைசியில் பிரம்மாஸ்திரத்தை ஏவி இலக்குவன் முதலிய எல்லோரையும் அடித்து வீழ்த்தினான். உடனே தன் வெற்றிச் சங்கை எடுத்து இலங்கை முழுவதும் கேட்கும்படி 'பம் பம்' என்று ஊதினான். அந்தச் சத்தங் கேட்ட இராவணன் மனம் குளிர்ந்தது.

இராமன் ஓடிவந்து தம்பி கிடந்த நிலையைக் கண்டு விழுந்தழுதான். இராமனை எல்லோரும் தேற்றினார்கள். அதற்குள் மகா வீரனான அனுமன் சஞ்சீவி கொண்டுவரப் போனான். பொழுது விடியுமுன் சஞ்சீவி என்ற அந்த அதிசய மருந்துடன் அனுமன் வந்ததும் மயக்கம் நீங்கி எழுபவர்கள் போல எல்லோரும் எழுந்து விட்டார்கள்!

இராவணன் இதை அறிந்து இனி என்ன செய்வது என்று கலங்கினான். அப்போது இந்திரசித்து இலக்குவனது வீரத்தைப் பற்றித் தன் தந்தைக்குச் சொல்லியும் அவன் கேட்க

வில்லை. பிறகும், ''கடைசி முறையாகப் போகிறேன்.'' என்று அந்த வீரன் புறப்பட்டான். போனதும் ஒரு மாயஞ் செய்தான். சீதையைப் போல ஒருவனை மாயத்தால் மாற்றி அனுமன் முன் நிறுத்தி வெட்டி எறிந்தான். பிறகு, ''அயோத்திக்குப் போய் பரதன் முதலியோரையும் இதோ கொல்லுகிறேன்'' என்று கிளம்பினான்.

அனுமன் அழுது கொண்டுபோய் இராமனிடம் இவற்றைச் சொன்னான். உடனே விபீஷணன், ''எல்லாம் மாயம். அவன் நிகும்பலையில் வேள்வி செய்யப்போகிறான். வேள்வி முடிந்தால் நம்மை வென்று விடுவான். விரைவாகப்போய் அந்த வேள்வி நடக்காதபடி செய்யவேண்டும்'' என்று சொல்லிக் கொடுத்தான்.

உடனே இலக்குவனும் அனுமன் முதலிய வீரர்களும் நிகும்பலை சென்று வேள்வியை அழித்தனர். இந்திரசித்து நாகம் போலச் சீறிக்கொண்டு போருக்கு ஆயத்தமானான். கடைசியில் இலக்குவனது பாணம் ஒன்று அவன் தலையை அறுத்துத் தள்ளியது. அவன் தலையை அங்கதன் எடுத்து வந்து இராமனது பாதத்தில் வைத்தான்.

## 16. இராவணன் அழிந்தான்

இந்திரசித்து இறந்ததைக் கேட்டு இராவணன் புழுப் போலத் துடித்தான். அவன் தாயான மண்டோதரியும் அலறி அழுதாள்.

''என் மகனைக் கொன்ற மனிதரை விடேன்'' என்று சபதஞ் செய்து இராவணன் தன் மூல பலச் சேனையை ஏவினான். தானும் ஒரு பக்கத்தில் நின்று இராமனது படைகளை நாசஞ் செய்தான்.

இராமனோ மூலபலத்தின் மீது மோகன அஸ்திரத்தை விட்டு மயக்கி அவர்களை அழித்து விட்டான்.

இராவணனுக்கும் இலக்குவனுக்கும் முதலில் கடும் போர் நடர்ந்தது. இடையில், தன் குலத்துக்கு நாசஞ் செய்தவன் என்று விபீஷணன் மீது இராவணன் தன் வேலை எறிந்தான். சரணம் என்று வந்தவனைக் காப்பதுதான் தருமம் என்று இலக்குவன் அந்த வேலைத் தானே மார்பைக் காட்டி ஏற்றான். அந்த செய்கைக்காக இராமன் தன் தம்பியை வாயார வாழ்த்தி அணைத்துக் கொண்டான்.

பிறகு இராம இராவண யுத்தம் மூண்டது. வெகுநேரம் இருவரும் அற்புதமாகச் சண்டை செய்தார்கள். கடைசியில் இராமபாணம் ஒன்று சீறிக் கொண்டு போய் இராவணனது நெஞ்சைப் பிளந்தது. பாவமலை விழுந்தது போல அந்த மகா வீரன் நிலத்தில் விழுந்து கண்ணை மூடினான்.

அதைக் கேட்ட அவன் மனைவி மண்டோதரி அலறி அழுது அழுது ஓடி வந்து அவன்மீது விழுந்து இறந்து போனாள். வெறுந்தரையில் துணையின்றி விழுந்து கிடந்த அண்ணனைப் பார்த்து விபீஷணனுமே அழுது விட்டான். பிறகு, தன் அண்ணன்மார் முதலான எல்லாருக்கும் இறந்த பிறகு செய்யும் கடன்களை அவனே செய்து முடித்தான்.

## 17. சீதையின் அக்கினிப் பிரவேசம்

கொடிய போர் முடிந்து விட்டது. இராமன் விபீஷணனைப் பார்த்து, "அன்பனே நீ போய்ச் சீதையை அழைத்துவா" எனறு அனுப்பினான்.

விபீஷணன் தேவியிடம் போய், "தாயே, தங்களை பிரபு அழைத்துவரச் சொன்னார்" என்றான்.

தேவி எழுந்து நீராடினாள். உடைகளை அணிந்து கொண்டு சிவிகையில் வந்து தன் நாயகனை வணங்கினாள். உள்ளும் புறமும் தூய்மையான தன் தேவியைக் கண்டு இராமன் மனம் பூரித்தான். பிறகு, அவளைப் பார்த்து வேதனையோடு இதைச் சொன்னான்:

"சீதா, நீ நீசனிடம் இருந்த குற்றம் தீரவேண்டுமே. இந்த அறிவில்லாத உலகம் பழிக்கப் போகிறதே என்று தான் வருந்துகிறேன்."

உடனே அவள் அக்கினியை வளர்க்கும்படி சொன்னாள். அதிலே இறங்கி வெளிவந்தாள்.

மாசற்ற அவள் வடிவம் மேலும் பிரகாசத்துடன் காணப் பட்டது. தேட முடியாத தன் செல்வத்தை இராமன் கண் குளிரக்கண்டு அணைத்துக் கொண்டான்.

## 18. முடி சூட்டு விழா

புஷ்பகம் என்ற இராவணனது விமானத்தில் எல்லோரும் அயோத்திக்குப் புறப்பட்டார்கள். வழியில் சேதுவையும் மற்றும் விசேடங்களையும் சீதைக்குக் காட்டிக் கொண்டே இராமன் சென்றான். பிறகு கிஷ்கிந்தை நகரில் இறங்கி வாலி யின் மனைவி தாரை முதலியவர்களையும் தங்களோடு கூட்டிக் கொண்டு கங்கைக் கரைக்கு வந்தார்கள். அங்கே இருந்த வேடுவனான குகனையும் அழைத்துக் கொண்டு, பரத்துவாச முனிவரது தவவீட்டை அடைந்தார்கள்.

இராமன் அனுமனைக் கூப்பிட்டு, "அன்பனே, பரதன் ஏங்கிக்கொண்டு நந்திக் கிராமத்தில் என்னைப் பார்த்திருப் பான். நாளை வருகிறேன் எனச் சொல்", என்று சொல்லி அனுப்பினான்.

"பதினான்கு வருஷம் முடிந்தது. அண்ணனைக் காண வில்லை. இனி நான் சாவேன்" என்று பரதன் நெருப்பில் விழ ஆயத்தஞ் செய்து கொண்டிருந்த பொழுதே அனுமன் வந்து சேர்ந்தான்.

'நாளை வருகிறார்கள்' என்ற செய்தி அயோத்திக்கு அமிர்தமாக இருந்தது.

இராமன் எல்லோருடனும் நந்திக் கிராமம் வந்து சேர்ந்தான். குலகுரு வசிட்டரையும், தாய்மாரையும், பெரியோரையும் வணங்கினான்.

இராமனை வரவேற்க அயோத்தியை அலங்கரித்தார்கள். எங்கும் வாழை, கமுகு நட்டுத் தோரணங்கட்டிக் கும்பம் வைத்து விளக்கேற்றினார்கள். இராமன் எல்லோரும் சூழ அயோத்தி நகரத்துக்குள்ளே வந்தான்.

பிறகு, நல்ல நாளில் இராமனுக்கு குலகுருவான வசிட்டரே முடி சூட்டினார்.

அன்புள்ள இளைஞர்களே, கதைகளைப் படிக்கும் போது, அக்கதையில் வரும் நல்லவர்களைப் போல நாமும் வரவேண்டுமென்று விருப்பம் கொள்ள வேண்டும். அப்படியான நல்லவர்களைச் சேர்ந்து பழக வேண்டும்.

கதையில் வரும் கெட்டவர்களைப் போல பிறர் தூற்றும்படி வாழக் கூடாது. அப்படியான கெட்டவர்களோடு உறவு வைத்துக் கொள்ளக் கூடாது.

உங்கள் பிற்காலத்தில் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் புகழ் பெற்று வாழ்வதற்கு நல்ல நூல்களைத் தொடர்ந்து படித்து வரவேண்டும்.

படிப்பதற்கு எத்தனையோ துறைகள் உள்ளன. இலக்கியம், வரலாறு, புவியியல், உடல் நலவியல், சமயம், கணக்கியல், பொறியியல் — இப்படி எத்தனையோ துறைகள். ஒவ்வொரு துறைபற்றியும் நூற்றுக் கணக்கான நூல்கள் உள்ளன.

பாடசாலைக் கல்வி நிறைவுற்ற பிறகும் நீங்கள் படிப்பதை நிறுத்தக் கூடாது. உங்களுக்கு விருப்பமான துறையில் நல்ல நூல்களைத் தெரிவு செய்து படிக்க வேண்டும்.

அப்படிப் படித்து வந்தால் நிச்சயம் நீங்கள் பெரும் புகழ் வாய்ந்த அறிஞராக வருவீர்கள்!

'கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு'

— வரதர்

குட்டிக் கதை

# முயலாரும்
# தேநீர்ப் பாத்திரமும்

முயலார் ஒரு நாள் தமது வீட்டில் தேநீர் விருந்து நடத்தினார். அந்த விருந்துக்குத் தமது நண்பர்கள், உறவினர்கள் பலரையும் அழைத்திருந்தார்.

முயலாரின் அழைப்பையேற்று அவர்கள் எல்லோரும் வருகை புரிந்தார்கள். மாலை நேரம். முயலார் பெரியதொரு தேநீர்ப் பாத்திரத்திலிருந்து கோப்பைகளிலே தேநீரை ஊற்றும் வேலையில் ஈடுபட்டிருந்தார்.

அந்த வேளையில், அழையாத விருந்தாளிகளாய் நரியாரும், கரடியாரும் வீட்டினுள்ளே நுழைந்தார்கள். அவர்களைக் கண்டதுதான் தாமதம். முயலாரின் நண்பர்களும் உறவினர்களும் மூலைக்கு ஒருவராக ஓடி மறைந்தனர். நரியும் கரடியும் தங்களைப் பிடித்துச் சாப்பிட்டு விடும் என்று அவர்களுக்குப் பயம்! எஞ்சி நின்றவர் முயலார் மட்டுமே!

முயலாருக்கு உடல் நடுங்கியது. என்ன செய்வதென்றே தெரியவில்லை. கரடியாரும், நரியாரும் உள்ளே வந்தது வர முன்னம் முயலார் தேநீர்ப்பாத்திரத்தினுள்ளே பாய்ந்து புகுந்து மூடியாலே மூடிக்கொண்டார். நல்ல காலம், அவர் ஒளித்ததைக் கரடியாரோ நரியாரோ காணவில்லை.

சிறிது நேரம், அவர்கள் 'வெளியே ஓடியவர்கள் திரும்பி வருவார்கள்' என்று காத்திருந்தார்கள். ஒருவரும் திரும்பவில்லை. மேசையில் தேநீர்ப்பாத்திரமும் கோப்பைகளும் மட்டுமே இருந்தன.

''போனவர்கள் எப்படியும் திரும்பத்தானே வேண்டும்? தேநீர் விருந்துக்கு வந்தவர்கள் எங்களுக்கு விருந்தாகாமலா போகப் போகிறார்கள்? பொறுத்திருந்து பார்ப்போம்'' என்றார் நரியார்.

தேநீர்ப்பாத்திரத்தினுள்ளே கொதிக்கின்ற தேநீரால் உடல் நனைந்த வேதனையோடு நரியாரின் பேச்சும் சேர்ந்து முயலாரை அதிகம் அதிகமாக நடுங்க வைத்தன. அவரின் உடல் அசைய அசையத் தேநீர்ப்பாத்திரமும் மேசையில் அங்கும் இங்குமாக அசைந்தது; கடகடத்தது.

இந்தச் சப்தம் கரடியாருக்கும், நரியாருக்கும் வியப்பை உண்டாக்கியது. அதே வேளை பாத்திரத்துக்குத் தமது பின் பக்கத்தைக் காட்டி நின்ற நரியாரின் முதுகிலே பாத்திரம் மோதியது. அவருக்கு நல்ல அடி!

அவர் கரடியார்தான் தம்மை அடித்தவர் என்று நினைத்து, கோபத்துடன் ''உமது சேட்டையை விடும். இல்லாவிட்டால் உம்மோடு நான் சண்டை பிடிக்க வேண்டி யிருக்கும்'' என்றார் நரியார்.

கரடியாரோ, ''நான் உம் அருகிலேயே வரவில்லை. பொய் சொல்ல வேண்டாம்'' என்றார்.

அப்பொழுதும் பாத்திரம் மறுமுறை இடிக்க நரியாருக் குக் கோபம் வந்து, ''மீண்டும் சேட்டை விடுகிறீர் கவனம்'' என்றார்.

''பேய்க்கதை பேசவேண்டாம்'' என்றார் கரடியார். ஆனால் இப்பொழுது பாத்திரம் கரடியாரின் பின்பக்கத்தில் வந்து மோதியதோ இல்லையோ, கரடியாருக்கு நரியார் தம் மீது பழி வாங்குகிறார் என்று கோபம் கோபமாய் வந்தது.

கரடியார் நரியார் மீது பாய்ந்தார். இருவருக்கும் இடையே பெரிய சண்டை! கதிரைகள் உருண்டன. பாத்தி ரங்கள் சிதறின, ஆனால் மேசையிலிருந்த தேநீர்ப் பாத்திர மும் கோப்பைகளும் கீழே விழவில்லை.

நீண்ட நேரச் சண்டையின் பின்பு இருவரும் களைத்துப் போயினர். நரியார் திரும்பித் தற்செயலாகத் தேநீர்ப் பாத்திரத்தைப் பார்த்தார். அதே வேளையில் முயலாரின் இரு காதுகளும் கண்களும் மட்டும் மூடிக்கும் பாத்திரத்துக்கும் இடையால் வெளியில் தெரிந்தன.

நரியார் பயந்து போனார். “கரடியாரே, அதோ பாரும் தேநீர்ப் பாத்திரத்துக்குக் கண்களும், காதுகளும் இருக்கின்றன. இது புதினமாய் இருக்கிறது. இதுதான் எங்களை அடித்தது போலும்!” என்றார்.

கரடியார் திரும்பிப் பார்த்த போது, முயலார் பாத்திரத்தின் உள்ளே தமது கால்களை அசைக்கப் பாத்திரம் மேசையின் முன்பக்கமாக நகர்ந்தது; பக்கவாட்டில் நகர்ந்தது; முன்னும் பின்னுமாகச் சென்றது.

“ஐயோ! தேநீர்ப் பாத்திரம் எங்களைப் பிடிக்க வருகிறது!” என்று சத்தம் போட்டவண்ணம் கரடியாரும், நரியாரும் அவ்விடத்தில் இருந்து காற்று வேகத்தில் பறந்தோடி மறைந்தார்கள்!

அதன் பிறகு முயலார் தேநீர்க் கோப்பையை விட்டு வெளியேறி வந்து, ஓடி ஒளித்த தமது நண்பர்களையெல்லாம் வரவழைத்து தேநீர் விருந்தைச் சிறப்பாகக் கொண்டாடினார்!

ஆங்கிலத்தில் எழுதியவர்: ‘எனிற் பிளைற்றன்.’

தமிழில்: ‘சொக்கன்.’



NAGO

# EXERCISE BOOK

NAME: ______________________________

SUBJECT: ______________________________

SCHOOL: ______________________________

GRADE: ______________________________

A 5 SIZE 148mm 210 mm

PRICE: 7.50 PAGES: 80

**படித்து விட்டீர்களா?**

**வரதர் கதை மலர் - 1**

# அவன் பெரியவன்

பிரபல எழுத்தாளர்

**அநு வை. நாகராஜன்**
**எழுதியது.**

காட்டில் வாழ்ந்த
''ஹாஜா'' என்ற
சிறுவனையும் 'கஜா'
என்ற யானையையும்
பற்றிய மிகச்
சுவையான கதை.

**விலை ரூபா 12/-**

---

**வரதர் கதை மலர் - 3**

# போக்கிரி முயலாரின் சாகசங்கள்

ஆங்கிலத்தில்
'எனிட் பிளைட்டன்'
எழுதியது.

தமிழில் தருகிறார்:
மூதறிஞர்
**"சொக்கன்"**

**93, ஒக்டோபர் வெளியீடு**